FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313215

1. District : செங்கல்பட்டு PS: செ.ஏ.ந பாரி Year: 2026 FIR No.: 14 Date: 24.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7, 7 r/w 12
(ii) Act சட்டம்: Act - 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: - 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 23.10.2026 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.00 Time to : 22.00
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24.10.2026 Time : 15.30
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol - II Time : 24.10.2026 / 16.00
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 6 km தென்கிழக்கில்
Beat Number : (b) Address : மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 4வது தளம், D பிளாக், மாவட்ட அட்சியர் அலுவலகம், செங்கல்பட்டு
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. தமிழரசன் (b) Father's/ Husband's Name : ராஜசேகரன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : நில வட்டாட்சியர், 8 வது பாதுகாப்பு தீட்டம், நீர்வளத் துறை வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்
தொழில் முகவரி
மாவட்ட நகர் அமைப்புத் துறை அலுவலர், செங்கல்பட்டு (பொறுப்பு)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. ஜனார்தனன் ஐ.ஏ.எஸ் ஸ்ரீநாமலைகுமான், கிட்டிடனை/ நிட்ட தலைவர், DTCP, செங்கல்பட்டு. 2) திரு. M. விக்ரமன் B.E மதிய்யதன், செங்கல்பட்டு, 3) திருசோனன் ஐ.ஏ.எஸ் மணி, உதவி இயக்கம் நான் வாகன ஓட்டுநர் (ஓய்வு)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: பணியாளர், DTCP, செங்கல்பட்டு 4) திரு. ராஜசேகர்
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

ஐ.ஏ.எஸ் அருளன், எண் 73/16, வேண்பல் தெரு, கிழ்பாக்கம், சென்னை - 10 (புலனாய்வு / தனிநபர்)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-

ஐயா, நகல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டிருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.10.2026

24.10.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

தலைமை காவலர்,
உளவுத் தகவல் பிரிவு சென்னைமாநகர்

Name: பெயர் ..... பிரபு.
Rank: நிலை .....No. எண் .....

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.10.2026 / 17.00

FIR வரிசை எண் 12-ன் தொடர்ச்சி

இன்று 24.10.2026 15.30 மணிக்கு செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் A.சக்கரபாணி ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.இரா.தமிழரசன், தனி வட்டாட்சியர் (ச.பா.தி), திருக்கழுக்குன்றம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், செங்கலபட்டு (பொறுப்பு) என்பவர் செங்கல்பட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின் வருமாறு.

அனுப்புநர், இரா.தமிழரசன், தனி வட்டாட்சியர் (ச.பா.தி), திருக்கழுக்குன்றம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், செங்கல்பட்டு (பொறுப்பு). பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, செங்கல்பட்டு. ந.க.எண். 207/2026/I 2, நாள்:- 24.10.2026. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), செங்கல்பட்டு மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு - செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - 23.10.2026-ம் தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல்நடவடிக்கை மேற்கொள்ள புகார் அளிப்பது - தொடர்பாக. பார்வை. செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.207/2026/I 2, நாள்:23.10.2026. செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் 4வது தளத்தில் D பிளாக்கில் இயங்கி வரும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பொது மக்கள், கட்டுமான கட்டிட உரிமையாளர்கள், பதிவு பெற்ற பொறியாளர்கள், கட்டுமான நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து கட்டிட அனுமதி, நிறுவன அனுமதி, மனைப்பிரிவு அனுமதி, அனுமதியற்ற மனைப்பிரிவு அனுமதி, மனை வரன்முறை மற்றும் நில உபயோக மாற்றம் அனுமதி வழங்க லஞ்சப்பணம் வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இன்று 23.10.2026-ம் தேதி மாலை சுமார் 15.00 மணி முதல் 22.00 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு. 23.10.2026-ந் தேதி மாலை சுமார் 15.00 மணியளவில் இரு துறை தணிக்கையாக செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு உள்ளே சென்று உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர் அறைக்கு சென்று பார்த்தபோது அப்பொழுது அந்த அலுவலக அறையில் யாரும் இல்லை. அதன் பின்னர் மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் தொழில்நுட்ப பிரிவிற்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.வரதராஜன், கட்டிட கலை/திட்ட உதவியாளர் பணியிலிருந்தவரிடம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், என்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.க.வே.கலைசெல்வம், காவல் ஆய்வாளர் திரு.A.சக்கரபாணி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கதிர்வேல், பெண் தலைமைக் காவலர்கள் திருமதி.பரமேஸ்வரி, திருமதி.பூங்கொடி, த.கா.663 திரு.தினேஷ் வினோ, த.கா.1770 திரு.மோகன், த.கா.1660 திரு.சாந்தகுமார் மற்றும் காவலர் 470 திரு.பிரசாந்த் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு நானும், காவல் துணை கண்காணிப்பாளரும் ஆகிய இருவரும் உதவி இயக்குநர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களைப் பற்றி கேட்ட போது அவர் ஒரு நாள் தற்செயல் விடுப்பில் சென்றுள்ளதாக தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவரது செல் போனிலிருந்து திரு.முருகன், துணை இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களை அவரது செல் போன் (எண் 7397604422)-க்கு தொடர்பு கொண்டு கேட்ட போது சென்னை நகர ஊரமைப்பு ஆணையர் அவர்களிடம் உதவி இயக்குநர் திரு.கிருஷ்ணகுமார் இன்று ஒரு நாள் குடும்ப விழாவிற்கு செல்ல வேண்டி (23.10.2026) சிறு விடுப்பில் அனுமதி பெற்று சென்றிருப்பதாக தகவல் தெரிவித்தார். மேலும் அவர் உதவி இயக்குநர் ஒரு நாள் சிறு

லுப்பில் இருப்பதால் அந்த அலுவலகத்தில் தொழில்நுட்ப பிரிவிற்கு திரு.வரதராஜன், கட்டிட கலை / திட்ட உதவியாளர் என்றும், நிர்வாகப் பிரிவிற்கு கண்காணிப்பாளர் திரு.இரா.ஆனந்குமார் பொறுப்பு என்று தெரிவித்தார். அப்பொழுது வெளியே சென்றிருந்த கண்காணிப்பாளர் திரு.இரா.ஆனந்குமார் அலுவலகத்திற்கு வந்தார். திரு.ஆனந்குமார் மற்றும் திரு.வரதராஜன் ஆகிய இருவரிடமும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் அறிமுகம் செய்து கொண்டு என்னுடன் வந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் பெண் தலைமைக் காவலர்கள் மற்றும் விஜிலன்ஸ் பார்ட்டி சகிதம் அறிமுகம் செய்து வைத்து மேற்படி சோதனைக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் செங்கல்பட்டு நகர் உதவி இயக்குநர் அலுவலக அறையானது வடக்கு பார்த்தவாறு பிரதான வாயிலும், மேற்கு பார்த்தவாறு மற்றொரு வாயிலும் அமைந்திருந்தது. மேற்படி அலுவலகமானது 1) உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் அவர்களின் அலுவலக அறையும் அதனையடுத்து 2) நிர்வாகப்பிரிவும், அதனையடுத்து 3) தொழில்நுட்ப பிரிவும் அறையும் மற்றும் நிர்வாகப் பிரிவு அலுவலக அறைக்கு எதிர்புறம் 4) பதிவறையும் அமைந்துள்ளது. பின்னர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், காவல் துணை கண்காணிப்பாளர், கட்டிட கலை / திட்ட உதவியாளர் திரு.வரதராஜன், கண்காணிப்பாளர் திரு.ஆனந்குமார் மற்றும் விஜிலன்ஸ் பார்ட்டி சகிதம் செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அலுவலக அறையை சோதனை செய்த போது எந்த வித பொருளும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் அங்கிருந்து நானும், காவல் துணை கண்காணிப்பாளர், கட்டிட கலை / திட்ட உதவியாளர் திரு.வரதராஜன், கண்காணிப்பாளர் திரு.ஆனந்குமார் மற்றும் விஜிலன்ஸ் பார்ட்டி சகிதம் தொழில்நுட்பப் பிரிவு அறைக்கு சென்று பணியிலிருந்த கீழ்கண்ட அலுவலக பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு சோதனைக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு தகவல் தெரிவித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

வ எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திரு.வரதராஜன், த/பெ.ஸ்ரீராம பெருமாள், கட்டிட கலை/ திட்ட உதவியாளர்	–	பணம் ஏதும் இல்லை. அவர் பயன்படுத்தும் செல்போன் (7904949235) G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த ஆகஸ்ட் 2026 முதல் 23.10.2026 காலகட்டத்தில் அவர் பயன்படுத்தும் இந்தியன் வங்கி முட்டம் கிளை, கன்னியாகுமரி மாவட்டம் (கணக்கு எண் 6420795416) வங்கி கணக்கு மூலமாக பணம் ரூ.1,64,675/- பரிவர்த்தனை மூலமாக பெறப்பட்டுள்ளது. அதில் இன்று (23.10.2026) தேதி காலை 10.36 மணியளவில் புரோக்கர் திரு.ராஜேந்திரன் என்பவர் செல் போனிலிருந்து பணம் ரூ.15,000/- G-Pay மூலம் பெறப்பட்டுள்ளது. எதற்காக பணம் பெற்றீர்கள் என்று விசாரித்த போது அவரது வீட்டு கடன் கட்டுவதற்காக JJB Engineers உரிமையாளர் திரு.பாரதிதாசன் அவர்களின் கடையில் பணிபுரியும் திரு.ராஜேந்திரன் மூலமாக ரூ.15,000/- பெற்றதாக தெரிவித்தார்.
2.	திருமதி.முத்துலட்சுமி க/பெ.செல்குமார், மேற்பார்வையாளர் / வரைவாளர் (நிலை-2)	ரூ. 300/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.சிவகுமார், த/பெ.மதியழகன் மேற்பார்வையாளர் / வரைவாளர் (நிலை-2) திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திலிருந்து பணி ஏற்பாட்டின் கீழ் செங்கல்பட்டு மாவட்ட	ரூ.555/-	மேற்படி நபர் வெளிப்பணியாக திரு.சோழன், ஒப்பந்த ஓட்டுநருடன் சென்றிருந்தவர் தகவலின் பேரில் மாலை சுமார் 04.10 மணிக்கு அலுவலகம் வந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் பணம் ரூ.555/- இருந்தது. மேற்படி பணத்தை தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் பயன்படுத்தும் செல்போன் (7639359903) G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த 03.10.2026-ம் தேதி தனது மனைவியின் தாயார் திருமதி.செல்வி என்பவரின் கனரா வங்கி வல்லம் கிளை தஞ்சாவூர்

	நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கடந்த ஆகஸ்ட் 2026 முதல் பணிபுரிவதாக தெரிவித்தார்.		மாவட்டம் (கணக்கு எண் 123110125976-4) வங்கி கணக்கிற்கு பணம் ரூ.40,000/- G-Pay பரிவர்த்தனை மூலமாக JJB Engineers உரிமையாளர் திரு.பாரதிதாசன் அவர்களின் கடையில் பணிபுரியும் திரு.ராஜேந்திரன் மூலமாக ரூ.40,000/- பெற்றதாக தெரிவித்தார். எதற்காக பணம் பெற்றீர்கள் என்று விசாரித்த போது அவர் வீட்டு வேலைக்காக கடன் பெற்றதாக தெரிவித்தார்.
4.	திரு.இளவரசன். த பெ.சடகோபன். வரைவாளர் (நிலை-3)	ரூ.380/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.சதீஷ் த பெ.சுபாபதி வரைவாளர் (நிலை-3)	ரூ.20/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
6.	திருமதி.கிரிஸ்டினா மேரி க பெ.அருள்ராஜ். வரைவாளர் (நிலை-3)	ரூ.250/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.சிவகுமார். த பெ.மாரியப்பன் நில அளவர் / உதவி வரைவாளர்	ரூ.3,340/-	காலை அலுவலகத்திற்கு வரும் போது ரூ.3,700/- பணம் கொண்டு வந்ததாகவும் அதில் மதிய உணவு செலவு மற்றும் இதர செலவு போக மீதி பணம் ரூ.3,340/- வைத்திருந்ததாகவும் தனது தாயாருக்கு சர்க்கரை மாத்திரை வாங்குவதற்காக மற்றும் தனக்கு தோல் சம்மந்தமான வியாதி மற்றும் வலிப்பு நோய் இருப்பதால் அதற்கு மாத்திரை வாங்குவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
8.	திரு.ரமேஷ் த பெ.புவனகிரி கருக்கெழுத்து தட்டச்சர்	ரூ.60/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
9.	திருமதி.புகழரசி. க பெ.பாண்டுரங்கன். (தற்காலிக பணியாளர்) எண் 364. வள்ளலார் தெரு. மேமையூர். செங்கல்பட்டு	--	பணம் ஏதும் இல்லை.
10.	திருமதி.சரஸ்வதி.க பெ.ஜோதிபிரகாஷ் (தற்காலிக பணியாளர்) எண் 33. திருப்புரகந்தரி தெரு. திருக்கழுகுன்றம்	ரூ.1500/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
11.	திருமதி.கவிதா. த பெ.தனசேகரன். (தற்காலிக பணியாளர்) எண் 31. படவேட்டம்மன் கோவில் தெரு. அரும்புலியூர் அஞ்சல் & கிராமம். காஞ்சிபுரம் மாவட்டம்	ரூ.45/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து நானும், காவல் துணை கண்காணிப்பாளர், கட்டிட கலை / திட்ட உதவியாளர் திரு.வரதராஜன், கண்காணிப்பாளர் திரு.ஆனந்குமார் மற்றும் விஜிலன்ஸ் பார்ட்டி சகிதம் நிர்வாகப் பிரிவு அலுவலக அறைக்கு சென்று பணியிலிருந்த கீழ்கண்ட அலுவலக பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு சோதனைக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு தகவல் தெரிவித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விவரம்
1.	திரு.ஆனந்தகுமார். த பெ.ராஜாங்கம். கண்காணிப்பாளர்	ரூ.1,320/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.புஸ்பலோஸ்வரி. க பெ.துரைபாண்டியன் உதவியாளர்.	ரூ.800/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.கோபாலகிருஷ்ணன். த பெ.சிவசங்கரன். மேல்நிலை கணக்கர்	ரூ.200/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.ஜனுன் ஜாரியா. க பெ.கலைமான். இளநிலை உதவியாளர்	ரூ.190/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.ஜெகன். த பெ.மக்காராமன். தட்டச்சர்	ரூ.1320/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து நிர்வாகப் பிரிவு அறைக்கு எதிரே இருந்த அலுவலக பதிவறையை சோதனை செய்த போது எதுவும் கைப்பற்றப்படவில்லை. அங்கிருந்த அலுவலகத்தின் வரவேற்பில் பணியிலிருந்த கீழ்கண்ட அலுவலக பணியாளர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு சோதனைக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறு தகவல் தெரிவித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திருமதி.கலா. க பெ.காண்டீபன் துப்புரவு பணியாளர். (ஒப்பந்தப் பணியாளர்)	ரூ.700/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.சோழன். த பெ.மணி உதவி இயக்குநரின் வாகன ஓட்டுநர்(ஒப்பந்தப் பணியாளர்)	ரூ.110/-	மேற்படி நபர் வெளிப்பணியாக திரு.சிவக்குமார். மேற்பார்வையாளருடன் சென்றிருந்தவர் தகவலின் பேரில் மாலை சுமார் 04.10 மணிக்கு அலுவலகம் வந்தார். அவரை சோதனை செய்த போது அவரிடம் பணம் ரூ.110/- இருந்தது. மேற்படி பணத்தை தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் பயன்படுத்தும் செல்போன் (9940405454) G-Pay வை சோதனை செய்தபோது. கடந்த ஜனவரி 2025 முதல் மார்ச் 2026 வரையிலான காலகட்டத்தில் JJB Engineers உரிமையாளர் திரு.பாரதிதாசன் அவர்களின் G-Pay பரிவர்த்தனை மூலமாக அவரது பெயரில் உள்ள இந்தியன் வங்கி மேலமையூர் கிளை (A/c.No. xxxxxxx6788) மூலமாக பணம் ரூ.1,68,740/- மேலும் JJB Engineers கடையில் பணிபுரியும் இடைத்தரகர் திரு.ராஜேந்திரன் மூலமாக பணம் ரூ.20,900/- ஆக மொத்தம் ரூ.1,89,640/- பெற்றுள்ளார். எதற்காக பணம் பெற்றீர்கள் என்று விசாரித்த போது அவர் வண்டி வாடகை பணம் என்று தெரிவித்தார்.

மேலும் வரவேற்பிற்கு பக்கத்தில் பார்வையாளர்கள் காத்திருப்பு பகுதியில் பொது மக்கள் 1) திரு.ரவிச்சந்திரன், த/பெ.நித்தியானந்தம், செய்யூர், 2) திரு.பார்த்திபன், த/பெ.காண்டீபன், ஈஞ்சம்பாக்கம், சென்னை, 3) திரு.மணிவண்ணன், த/பெ.ஆறுமுகம், பாலவாக்கம், சென்னை, 4) திரு.ஜனார்தனன், த/பெ.ஆறுமுகம், பாலவாக்கம், சென்னை, 5) திரு.அரவிந், த/பெ.சங்கர், நீலாங்கரை, சென்னை ஆகியோர்களை விசாரணை செய்த போது பல்வேறு பணிகளுக்காக DTCP Approval வாங்க வந்ததாக தெரிவித்தமையால் அவர்களை விசாரணை செய்து அனுப்பப்பட்டது. மேலும் அங்கு சந்தேகத்திற்குரிய நபரான திரு.ராஜேந்திரன், த/பெ.முருகேசன் (Aadhar No.3743 8408 6316) எண் 73/6, லேண்ட்ர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-10 என்பவரை விசாரணை செய்த போது அவரிடம் பணம் ஏதுமில்லை, ஆனால் மேற்படி நபர் முன்னுக்குப்பின் முரணான தகவல் தெரிவித்தார். பின்னர் திரு.ராஜேந்திரனை விசாரணை செய்ததில் பதிவு பெற்ற பொறியாளர் திரு.பாரதிதாசன் அவர்கள் செங்கல்பட்டு வெம்பாக்கத்தில் நடத்தி வரும் JJB Engineers (Land Approval & Engineering Solutions) என்ற நிறுவனத்தில் சுமார் 8 மாதங்களாக ஜெராக்ஸ் எடுக்கும் பணி செய்து வருவதாகவும், மேலும் உரிமையாளர் திரு.பாரதிதாசன் சொல்லும் நபர்களிடமிருந்து பணத்தை பெற்று அதை தனது சேமிப்பு வங்கி கணக்கான Karur Vysya Bank, தேனாம்பேட்டை கிளை (A/C.No. 1229155000163228) மற்றும் இந்தியன் வங்கி, எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை கிளை (A/C.No. XXXXXXXX4403) ஆகியவற்றில் பணத்தை செலுத்தி தனது கைபேசி எண் (9943832810) மூலமாக திரு.பாரதிதாசன் அவர்கள் சொல்லும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு (G-Pay) UPI ID: mr.laradigital2810-4@okhdfcbank மூலமாக பணத்தை அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். இன்று (23.10.2026)-ம் தேதி காலை சுமார் 10.35 மணிக்கு எனது உரிமையாளர் திரு.பாரதிதாசன் பணம் அனுப்பச்சொன்ன தகவலை DTCP யில் பணிபுரியும் திரு.வரதராஜன் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து எனது G-Pay மூலமாக பணம் ரூ.15,000/- அனுப்பி வைத்தேன். மேலும் இந்த அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.மேரி மேடம் எங்கள் அலுவலகத்திற்கு போன் செய்து ஜெராக்ஸ் எடுக்க வரச் சொன்னதாக தெரிவித்த தகவலின் பேரில் தான் இந்த அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரது G-Pay பணப்பரிவர்த்தனையில் ஜூலை 2026 முதல் அக்டோபர் 2026 வரை ரூ.4,02,100/- சந்தேகத்திற்கிடமான பணம் பரிவர்த்தனைகள் காணப்பட்டது. மேற்படி இருதுறை கூட்டாய்வின் போது அலுவலகத்தில் தன்னிச்சையாக பணியிலிருந்த 1) திருமதி.புகழரசி, 2) செல்வி.சுவேதா மற்றும் 3) திருமதி.சரஸ்வதி ஆகியோர்களை விசாரித்த போது தாங்கள் கடந்த 6 மாதங்களாக உதவி இயக்குநர் அவர்களின் வாய்மொழி உத்திரவின் பேரில் இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாக தெரிவித்தார்கள். மேலும் அப்பொழுது உடன் இருந்த கண்காணிப்பாளர் திரு.ஆனந்குமார் மற்றும் திரு.வரதராஜன், கட்டிட கலை – திட்ட உதவியாளர் ஆகியோர்களை நான் விசாரணை செய்த போது மேற்படி நபர்கள் இவ்வலுவலகத்தில் சுமார் 6 மாதங்களாக தன்னிச்சையாக எந்தவொரு உத்திரவுமின்றி உதவி இயக்குநர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களின் வாய்மொழி உத்திரவின்படி இவ்வலுவலகத்தில் ஆள் பற்றாக்குறையால் பணிபுரிவதாகவும், மேலும் Outsourcing மூலம் பணியாளர்களை பணியமர்த்த தலைவர் / மாவட்ட ஆட்சியர், மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர், செங்கல்பட்டு மாவட்டம் பொருள் எண் 10 ந.க.எண் 3647/2026/மாஉதிகு (செ.மா), நாள் 07.09.2026 குழும கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் ஆனால் எங்கள் தலைமையக அலுவலகத்திற்கு முன்மொழிவு எதுவும் அனுப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் ஒப்பந்த பணியாளரான துப்புரவு பணியாளர் திருமதி.கலா என்பவருக்கு இவ்வலுவலக கோப்பு எண் 1881/2025/(செ.மா-1), நாள் 29.07.2025 அன்றும் மற்றும் வாகன ஓட்டுநர் திரு.சோழன் ஆகிய இருவருக்கும் இவ்வலுவலக கோப்பு எண் 1882/2025/(செ.மா-2), நாள் 29.07.2025 அன்று அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய என்னால் அலுவலகத்தில் பணிபுரியும் 1) திரு.வரதராஜன், கட்டிட

கலை – திட்ட உதவியாளர், 2) திரு.சிவகுமார், த/பெ.மதியழகன், மேற்பார்வையாளர் / வரைவாளர் (நிலை-2), 3) திரு.சோழன், த/பெ.மணி உதவி இயக்குநரின் வாகன ஓட்டுநர் (ஒப்பந்தப் பணியாளர்), 4) திரு.ராஜேந்திரன், த/பெ.முருகேசன் (புரோக்கர்) JJB Engineers பணிபுரியும் தனிநபர், தன்னிச்சையாக பணியமர்த்தப்பட்ட தனிநபர்களான 5) திருமதி.புகழரசி, 6) செல்வி.கவேதா மற்றும் 7) திருமதி.சரஸ்வதி ஆகியோர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தன்னிலை விளக்கம் பெறப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) பணியாளர் வருகைப் பதிவேடு (அக்டோபர் 2026), 2) பணியாளர் நகருதல் பதிவேடு (23.10.2026), 3) பணியாளர் கையிருப்பு விவரப் பதிவேடு (23.10.2026), 4) கோப்பு எண் 1881/2025/(செ.மா-1), நாள் 29.07.2025, 5) கோப்பு எண் 1882/2025/(செ.மா-2), நாள் 29.07.2025, 6) தீர்மானம் பொருள் எண் 10 ந.க.எண் 3647/2026/மாஉதிகு (செ.மா), நாள் 07.09.2026 ஆகியவற்றை நகல் எடுக்கப்பட்டு அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களால் சான்றொப்பமிட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் **"லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்"** என்ற அறிவிப்பு பலகை வெளிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலகத்தில் இருந்த ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு அவர்களது பணிக்கு எந்தவித இடையூறும் செய்யாமலும், அலுவலகத்தில் இருந்த எந்த பொருட்களுக்கும் சேதம் ஏற்படாமலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின் போது யாருக்கும் எந்தவித மன உளைச்சலும் கொடுக்கவில்லை. அலுவலக பணியிலிருந்த பெண் பணியாளர்களை காவல் ஆய்வாளர் பெண் தலைமைக் காவலர்கள் திருமதி.பரமேஸ்வரி மற்றும் திருமதி.பூங்கொடி ஆகியோர் மூலம் சோதனை செய்யப்பட்டது. இந்த இருதுறை கூட்டாய்வில், மொத்தம் பணம் ரூ.7,96,415/- சந்தேகத்திற்கிடமான G-Pay பணப்பரிவர்த்தனைகள் காணப்பட்டது. மேற்படி அலுவலகம் கட்டிடகலை / திட்ட உதவியாளர் திரு.வரதராஜன் மற்றும் கண்காணிப்பாளர் திரு.ஆனந்குமார் ஆகியோரிடம் நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த செயல்முறைகள் நான் சொல்ல சொல்ல த.கா. 663 திரு.தினேஷ் வினோ அவர்களால் அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 23.10.2026 தேதி மாலை 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின்போது திரு.வரதராஜன், த/பெ.ஸ்ரீராம பெருமாள், கட்டிட கலை/ திட்ட உதவியாளர் என்பவரின் G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த ஆகஸ்ட் 2026 முதல் 23.10.2026 வரையான காலகட்டத்தில் ரூ.1,64,675/-மும், திரு.சிவகுமார், த/பெ.மதியழகன், மேற்பார்வையாளர்/வரைவாளர் (நிலை-2), என்பவரின் G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த 03.10.2026-ம் தேதி அவரது மனைவியின் தாயார் திருமதி.செல்வி என்பவரின் G-Pay-ற்கு JJB Engineers உரிமையாளர் திரு.பாரதிதாசன் அவர்களின் கடையில் பணிபுரியும் திரு.ராஜேந்திரன் என்பவர் மூலமாக ரூ.40,000/-மும், திரு.சோழன், த/பெ.மணி உதவி இயக்குநரின் வாகன ஓட்டுநர் (ஒப்பந்தப் பணியாளர்) என்பவரின் G-Payவை சோதனை செய்தபோது, கடந்த ஜனவரி 2025 முதல் மார்ச் 2026 வரையிலான காலகட்டத்தில் ரூ.1,89,640/-, தனி நபர் திரு.ராஜேந்திரன், த/பெ.முருகேசன் என்பவரின் G-Pay பணப்பரிவர்த்தனையை ஆய்வு செய்தபோது ஜூலை 2026 முதல் அக்டோபர் 2026 வரை ரூ.4,02,100/-மும் ஆக மொத்தம் ரூ.7,96,415/- சந்தேகத்திற்கு இடமான G-Pay பணப்பரிவர்த்தனையாக மேற்படி அரசு உழியர்கள், ஒப்பந்த ஊழியர் மற்றும் தனி நபரிடம் காணப்பட்டது. எனவே மேற்படி நபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டி, கூட்டாய்வின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட பணியாளர் வருகைப் பதிவேடு (அக்டோபர் 2026), பணியாளர் நகருதல் பதிவேடு (23.10.2026), பணியாளர் கையிருப்பு விவரப் பதிவேடு (23.10.2026), கோப்பு எண் 1881/2025/(செ.மா-1), நாள் 29.07.2025, கோப்பு எண் 1882/2025/(செ.மா-2), நாள் 29.07.2025, தீர்மானம் பொருள் எண் 10 ந.க.எண் 3647/2026/மாஉதிகு (செ.மா), நாள் 07.09.2026, அலுவலக பணியாளர்கள் மற்றும் தனிநபர்கள், 18 நபர்களின் தன் விளக்க கடிதம், அலுவலக பணியாளர்கள் மற்றும் தனிநபர்கள் 7 நபர்களின் வாக்குமூலம் ஆகியவற்றின் சானிறொப்பமிட்ட நகல் மற்றும் பார்வையில் கண்ட

செயல்முறை ஆணை ஆகியவற்றை இணைத்து மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன். (Sdxxx) 24.10.2026 இரா.தமிழரசன், தனி வட்டாட்சியர் (ச.பா.தி). திருக்கழுக்குன்றம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், செங்கல்பட்டு (பொறுப்பு).

Submitted,

Today I received the complaint from Tr.R.Tamilarasan, Special Tahsildar (SSS), Thirukazhukundram Taluk, Chengalpattu District, Incharge Deputy Inspection Cell Officer, Chengalpattu on 24.10.2026 at about 15.30 Hrs. After obtaining prior permission from the DVAC, I registered a case in Chengalpattu Vigilance and Anti-Corruption in Cr.No.14/AC/2026/CP, U/s 7, 7 r/w 12 of The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 24.10.2026 at 16.00 Hrs. The original FIR along with the Complaint and relevant documents was sent to the Hon'ble Principal District and Sessions Court, Chengalpattu. sd/-xxxxx 24.10.2026 (A.Chakkarapani), Inspector of Police, V&AC, Chengalpattu.

24.10.2026

(அ.சக்கரபாணி)
காவல் ஆய்வாளர்.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
செங்கல்பட்டு.